தணிகை திருக்கணித பஞ்சாங்கம் பாலு சரவண சர்மா
*பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கண ணம்*
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின் னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென் னை 45, பாரத நாடு.



When Nandana Varusha Sama Vedha Upakarma ?

# இந்த வருடம் ஸாமவேத உபாகர்மா என்று ?



இந்த நந்தன வருஷம் ஆவணி மாஸத்தில் இரண்டு அமாவாஸைகள் வருவதால் அதிக பாத்ரபத மாஸம் சம்பவித்துள்ளது இந்த ஆவணி மாஸம் மலமாதம் என கருதப்படுவதால் ஸாமவேத உபாகர்மா நிர்ணயம் குறித்து சாஸ்திர பண்டிதர்களிடையே பலவித அபிப்ராய பேதங்கள் உள்ளன.

ஸ்ரீ காஞ்சி சங்கர மடத்திலும், அயோத்தியா மண்டபம் மற்றும் ஸ்ரீ நரஸிம்ஹப்பிரியா அலுவலகத்திலும் நடைபெற்ற நிர்ணயம் தொடர்பான சதஸ் மற்றும் விவாதங்களில் பஞ்சாங்க கணிதக்ஞர்கள், பஞ்சாங்க வெளியீட்டார்கள் கலந்துக்கொண்டனர். இதில் வேத சாஸ்திர வித்வான் கள் பலர் தங்களின் சாஸ்திரபூர்வமான, மூலகிரந்த விஷயங்களை மிக ஆழமாக விவாதித்துள்ளனர் .

இப்படிப்பட்ட விவாதங்களில் கலந்துக்கொண்ட **ஸ்ரீ. வேலாமூர் கிழநத்தம் வேணுகோபாலன்** அவர்களால் அடியேனுக்கு அனுப்பிவைத்த ஸாமவேத உபாகர்மா நிர்ணயம் தொடர்பான மடலை இங்கு எந்தவித திருத்தமும் இன் றி அப்படியே இணைத்துள்ளேன் .



ஆக்கபூர்வமான விஷயத்தை வெளியிட வாய்ப்பு தந்தமைக்கு ஸ்ரீ. வேலாமூர் கிழநத்தம் வேணுகோபாலன் அவர்களுக்கு எனது நன் றியை தெரிவித்துக்கொள்கிறேன் .

சாமவேத உபாகர்மா நிர்ணய சதஸ் தொடர்பான வீடியோ:
http://www.youtube.com/watch?v=jFmIm15byVI
http://youtu.be/yFPg-RBZlb8

இப்படிக்கு
**பாலு. சரவண சர்மா**

20.7.2012

குறிப்பு: இது தொடர்பான தங்களின் கருத்துக்களை **ஸ்ரீ. வேலாமூர் கிழநத்தம் வேணுகோபாலன்** அவர்களிடம் பகிர்ந்துக்கொள்ளலாம்.

S.VENUGOPALAN,
NEW,7 (OLD NO 4) LAKSHMI ST, WEST MAMBALAM, CHENNAI 600 033. INDIA
MOBILE +9172990 69777, +9199400 69777, Email: shrowtha@gmail.com

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# छान्दोगानां उपाकर्म निर्णयः

(வேலாமூர் கீழநத்தம் வேணுகோபாலன்)

ஸாமவேதகளின் உபாகர்ம விஷயத்தில் இந்த வருடம்(ஸ்ரீ நந்தன) சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இந்த வருடம் ஆவணி மாதத்தில் இரண்டு அமாவாஸ்யைகள் வருகின்றன. ஆகையால் இந்த மாதத்திற்கு மலமாஸ தோஷம் ஸம்பவிக்கின்றது. பொதுவாக மல மாஸத்தில் அக்ன்யாதனம் முதலிய ச்ரௌத கர்மாக்கள், விவாஹாதி சுபமுஹூர்த்தங்கள், காம்ய ஹோமங்கள், தேவாலய ஸம்ப்ரோக்ஷணங்கள், தீர்த்த யாத்ரைகள், உபாகர்ம முதலியவைகளை செய்யக் கூடாது என்று தர்ம சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. தோஷம் உள்ள காலத்தில் உபாகர்மாவை அனுஷ்டித்தால் தேசக்ஷயம்(நாட்டிற்கு கேடு) ஏற்படும் என்றும் சாஸ்தரங்கள் கூறுகின்றன.

ஆகையால் ஸாமவேதிகள் ஆவணி மாதத்தில் உபாகர்மாவை செய்யக் கூடாது என்கிறார்கள். சிலர் ஆடி மாதத்தில் செய்ய வேண்டும் என்றும், சிலர் புரட்டாசி மாதத்தில் செய்ய வேண்டும் என்றும் அபிப்ராயப்படுகிறார்கள். அதன்படி சில பஞ்சாங்கங்களிலும் ப்ரசுரிக்கப்பட்டு இருக்கின்றன.

மேற்படி சர்ச்சைக்கு போவதற்கு முன் இவர்கள் சொல்லக்கூடிய மலமாஸ தோஷம் ஸாமவேதிகளுக்கு உண்டா என்பதை பார்க்க வேண்டும். பொதுவாக உபாகர்மாக்களுக்கு மலமாஸ தோஷம் உண்டு என்றாலும் கீழ்வரும் அனேக ஸ்ம்ருதி வாக்யங்களை பார்க்கும் பொழுது ஸாமவேதிகளுக்கு உபாகர்ம விஷயத்தில் மலமாஸ தோஷமே கிடையாது என்பதே தெளிவாகிறது.

गृह्य कारिकायां - नोपकर्माधिमासेस्यात् अन्यशाखासु सर्वदा ।
अधिमासेऽपि साम्नां स्यात् गार्ग्यस्मृति वचोबलात् ।।

அன்ய சாகிகள் (ருக்,யஜுர்,அதர்வ) எப்பொழுதும் அதிமாஸத்தில் (மலமாஸத்தில்) உபாகர்மாவை அனுஷ்டிக்கக்கூடாது. ஸாமவேதிகளோவெனில் கர்காசார்ய வசனபலத்தால் மலமாஸமாக இருந்தாலும் அனுஷ்டித்தே ஆகவேண்டும். மேலும், ஹேமாத்ரி ,வீரமித்ரோதயம் முதலிய அதிப்ராசீன தர்ம சாஸ்த்ர க்ரந்தங்களில்

दशहरासु नोत्कर्षः चतुर्ष्वपि युगादिषु।
उपाकर्ममहाषष्ट्योः ह्येददिष्टं वृषादितः।।

என்கிற ருஷ்யச்ருங்க வசனத்தை காட்டி ரிஷப மாதத்தில் செய்ய வேண்டிய தசஹரா, ஐப்பசி, தை, சித்திரை, ஆவணி மாதங்களில் முறையே செய்ய வேண்டிய யுகாதி ச்ராத்தங்கள், கார்த்திகையில் செய்ய வேண்டிய மஹாஷஷ்டிவ்ரதம், உபாகர்மா இவைகளை விஹித காலத்தை விட்டு வேறு காலத்தில் செய்யக் கூடாது. இந்த உபாகர்மாவானது ஸாமவேதிகளின் விஷயம். ஏனென்றால்

गृह्य कारिकायां - यतः सिंहरवौ गार्ग्यः छन्दोगानां उपाकृतिम्।
प्राह भाद्रेऽधिके मासि सिंह एव रविर्भवेत्।।

சந்தோகர்களுக்கு ஸூர்யன் சிம்ஹ ராசியை அடைந்தபொழுது உபாகர்மாவை செய்யவேண்டும் என்பதாக கார்க்யர் சொன்னபடியால் அதிகபாத்ரபதம் தோஷம்

என்றாலும் (சௌரமாஸமான ஸிம்ஹ மாஸத்தில்) ஆவணியிலேயே செய்ய வேண்டும் என்றாகிறது. மேலும் ஸங்க்ரஹத்தில்

छन्दोगानां उपाकर्म युगादीनां चतुष्टयम्।
मलमासेपि कर्तव्यं वार्षिकं प्रथमाब्दिकम्।।

சந்தோகர்களுடைய உபாகர்மாவையும், நான்கு யுகாதிகளில் செய்ய வேண்டி ச்ராத்தங்களையும், ப்ரத்யாப்திக ச்ராத்தத்தையும், முதல் ஆப்திகத்தையும் ஸௌரமான பரமாக செய்ய வேண்டியதால் மலமாஸத்திலேயே செய்ய வேண்டும்.

காதிர க்ருஹ்ய ஸூத்ரத்தில்
**प्रौष्ठपदीं हस्तेनाध्यायानुपाकुर्युः। श्रावणीमित्येके।** என்பதாக ( சாந்த்ரமான ) ப்ரௌஷ்டபத சுக்ல ஹஸ்தமும், ச்ராவணமாத பூர்ணிமையும் உபாகர்மகாலமாக கிடைக்கின்றன. பாத்ரபத,ச்ராவண மாதங்கள் விஹிதமானாலும் यतः सिंहरवौ गार्ग्यः छन्दोगानां उपाकृतिम् என்ற கர்க்யாசார்ய வசனத்தால் (ஸிம்ஹ ரவியுடன்) ஆவணியுடன் கூடிய பாத்ரபத ச்ராவண மாதங்களே உபாகர்மாவை செய்வதற்கு ச்ரேஷ்டம்.

**ஸிம்ஹ ரவியின் விசேஷத்தை பார்ப்போம்.**

गायत्रं प्रथमं गानं आग्नेयन्तु द्वितीयकम्।
तृतीयकं ऐन्द्रं गानं स्यात् पावमानं चतुर्थकम्।।
अर्क द्वन्त व्रतञ्चेति पञ्चमं गानमुच्यते।
षष्टं च शुक्रियं गानं महानाम्नी च सप्तमम्।।
एतानि सप्तगानानि प्रकृतेः कथितानि च।

கௌதும சாகையைச் சேர்ந்த ஸாமகர்களுக்கு

1. ஸப்த கானங்களில் ஸவித்ரு தேவதாகமான காயத்ர கானமே முதல்கானம்.
2. வேதாத்யயனம் விதிக்கப்பட்ட தக்ஷிணாயனத்தில் ஸ்வக்ஷேத்ர பலத்துடன் ஸூர்ய பகவான் இருப்பது ஸிம்ஹராசியில் மட்டுமே.
3. உபாகர்மம் செய்ய ஸூத்ரத்தில் விதிக்கப்படுகிற ஹஸ்த நக்ஷத்ரத்திரமும் ஸவித்ரு தேவதாகமானதே

ஆகையால் ஸ்வக்ஷேத்ரத்தில் ஸூர்யன் உள்ள ஸிம்ஹ (ஆவணி) மாஸத்தில் ஸூர்ய நக்ஷத்ரமான ஹஸ்த நக்ஷத்ரத்தில் ஸூர்ய தேவதாகமான காயத்ர கானத்தை உபக்ரமிப்பதே ச்ரேஷ்டம்.
மேலும் முக்யகாலமான தைஷ்ய பௌர்ணமியில் வேத உத்ஸர்ஜனத்தை செய்து ஸிம்ஹ ரவியுடன் கூடிய பாத்ரபத சுக்ல ஹஸ்தத்தில் உபாகர்மாவை செய்ய வேண்டும். முக்யகாலமான தைஷ்ய பௌர்ணமியில் உத்ஸர்ஜனம் செய்யவில்லையென்றால் கார்க்ய வசனப்படி

सिंहे रवौ तु पुष्यर्क्षे पूर्वाह्ने विचरेद् बहिः।
छन्दोगाः मिलिताः कुर्युः उत्सर्गं सर्वच्छन्दसाम्।।

என்பதாக ஸிம்ஹரவி (ஆவணி) புஷ்ய நக்ஷத்ரத்தில் பூர்வான்ஹத்தில் ஸாமவேதிகள் சேர்ந்து உத்ஸர்ஜனம் செய்ய வேண்டும். கடக (ஆடி) மாஸத்திலேயே புஷ்ய நக்ஷத்ரம் வந்தால் (இந்த வருஷம் மாதிரி) காதிர க்ருஹ்ய காரிகா வசனப்படி

पुष्ये तु उत्सर्जनं कुर्यात् उपाकर्म दिनेऽथवा।

உபாகர்ம தினத்திலேயே பூர்வான்ஹத்தில் உத்ஸர்ஜனம் செய்ய வேண்டும்.

மேலும் கர்கர் வசனப்படி

शुक्लपक्षे च हस्तेन उपाकर्मापराह्निकम्।।

ஸிம்ஹ மாஸத்தில் சுக்லபக்ஷ ஹஸ்தத்தில் அபரான்ஹத்தில் உபாகர்மாவை செய்ய வேண்டும். இப்படியாக தைஷ்ய பௌர்ணமியில் உத்ஸர்ஜனத்தை செய்ய முடியாமற்போனால் அடுத்த பக்ஷமாக ஸிம்ஹ ரவி (ஆவணி) யில் உத்ஸர்ஜனத்தையும் உபாகர்மாவையும் செய்ய வேண்டும் என்பது கர்க வசனத்தால் தெள்ளத் தெளிவாகிறது.

## ஸூர்யனும் ஸாமவேதமும்

भूर्भुवस्स्वः என்ற வ்யாஹ்ருதியின் தேவதைகளாக அக்னி, வாயு, ஸூர்யன் இருக்கிறார்கள். முறையே அக்னி தேவதாகமான (भूः) ப்ரதம வ்யாஹ்ருதியை ருக் வேத ஸ்வரூபமாகவும் வாயு தேவதாகமான (भुवः) த்விதீய வ்யாஹ்ருதியை யஜுர் வேத ஸ்வரூபமாகவும் ஸூர்ய தேவதாகமான (स्वः) த்ருதீய வ்யாஹ்ருதியை ஸாம வேத ஸ்வரூபமாகவும் த்யானிக்கிறோம். छान्दोग्ये - स्वस्स्वाहा (सूर्यायेदं) इत्याहवनीये जुहुयात् साम्नामेव तद्रसेन साम्नां वीर्येन साम्नां यज्ञस्य विरिष्टं सन्दधाति இப்படி வேதங்களில் ஸாம வேதத்தையும் ஸூர்யதேவனையும் சேர்த்து பல இடங்களில் புகழப்படுகிறது. (யஜுர்வேத உபநயனத்தில் यजुर्भ्रेष ப்ராயச்சித்தமாக भुवः स्वाहा என்று செய்கிறார்கள்)

## ப்ரதம உபாகர்ம விஷயத்தில்

ஹாரீத வசனப்படி

अधिमासे नकर्तव्यं श्राद्धमभ्युदयं तथा।
तथैव काम्यं यत् कर्म वत्सरात् प्रथमादृते ।।

என்பதால் அப்யுதய (நாந்தீ) ச்ராத்தத்தை மலமாஸத்தில் செய்ய நிஷேதம். ப்ரதம உபாகரண அங்கமாக நாந்தீ ச்ராத்தம் செய்ய வேண்டியதால் ப்ரதம உபாகரணத்தை மலமாஸத்தில் செய்யக் கூடாது. स्मृतिसंग्रहे - प्रथमोपाकृति र्न स्यात् कृता कर्म विनाशकृत् । ப்ரதம உபாகர்மாவை மலமாஸத்தில் செய்தால் கர்ம நாசம் ஏற்படும் என்கிறது ஸ்ம்ருதி ஸங்க்ரஹம்.

இந்த விதி **ப்ரதம உபாகர்மாவிற்கு மட்டுமே** என்பதால் த்விதீயாதி உபாகர்மங்கள் மலமாஸமாக இருந்தாலும் ஸிம்ஹ மாஸத்திலேயே இந்த வருஷத்தில் ஆவணி-5 (21-08-12) செய்ய வேண்டும் என்பது தீர்மானமாகிறது. ப்ரதம உபாகர்மாவை மலமாஸ தோஷமற்ற புரட்டாசி 1 (17-09-12) திங்கட்கிழமை அனுஷ்டிக்க வேண்டும்.

ஸாமவேதிகள் இதில் உபாகர்மாவை செய்வதால் தேசக்ஷயம் முதலிய அசுபங்கள் ஏற்படாது. श्रुतिस्मृतिर्ममैवाज्ञा என்கிற பகவத் வசனத்தால் எம்பெருமானுடைய கட்டளைகளாகின்ற ஸ்ம்ருதி வாக்யங்களை உல்லங்கனம் செய்த தோஷமும் நம்மை வந்தடையாது.